நவசீனவிற்குப் புது அரசியல் சட்டம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆனி 3உ வியாழன் (17—6—54) | வெளியூர்: ஆனி 4உ வெள்ளி (18—6—54)

மலர்: 2 | இதழ்: 8

இடைக்கால ஏற்பாட்டையே ஒத்திருக்கிறது!

18 வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை

பேச்சுரிமை-பிரசுர உரிமை-சங்க உரிமை-மத உரிமை-தரப்பட்டுள்ளன!

மா-சே-துங் தலைமையில் ஒப்புதல் பெற்றது!

பொதுவுடைமை சீனவிற்குப் புதியதோர் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக் குழு, அதன் தலைவரான மா-சே-துங் தலைமையில் கூடி, ஒருமனதாக, புதிய அரசியல் சட்டத்திற்கு ஒப்புதல் தந்துள்ளது.

சீன மக்களின் ஆலோசனைக் குழுவால் நியமிக்கப்பட்ட, உயர்ந்த ஆட்சிப் பொறுப்பைப் பெற்றுள்ள மக்கள் மத்திய அரசாங்க குழு, 1949-ம் ஆண்டிலிருந்து, புதிய அரசியல் திட்டம் உருவாகும் வரை, ஏற்பட்ட ஆட்சியின்மையை, தற்காலிகமாக நிறைவேற்றி வந்து இருக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தை, தற்காலிக அரசாங்கக் குழு ஒப்புக்கொண்ட போதிலும், தேசிய மக்கள் காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட பின்னர்தான், அது நடைமுறைக்கு வரும். அதற்காக, கடந்த சில மாதங்களாகவே, சீனு முழுதிலும் தேர்தல் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் அம்மக்கள் காங்கிரஸ் கூட்டம் நடைபெறுமெனத் தெரிகிறது.

சீனு பொதுவுடமை கட்சி உருவாக்கிய அரசியல் திட்டத்தை, மக்கள் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட திட்டக் குழு ஆராய்ந்து முடிவு கண்டது.

புதிய அரசியல் சட்டம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது—முன்னுரை; பொது தத்துவங்கள்; அரசாங்க அமைப்பு; மக்கள் உரிமையும், கடமையும்; நாட்டுக் கொடி; அரசாங்க சின்னம்; அரசாங்கத் தலைநகர்.

106 ஷரத்துகள் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

அரசாங்கத் தலைவராக உள்ளவர் எவருக்கும்—தற்காலத் தலைவராக இருந்து வரும் மா-சே-துங்கிற்கும், சட்டங்களை அறிவிக்கவும், அதிகாரிகளை நியமிக்கவும், படைக்கு ஆணை இடுவதற்கும், நாட்டின் பாதுகாப்புக் குழுவிற்குத் தலைமை வகிப்பதற்கும், சட்டத்தில் உரிமை தரப்பட்டுள்ளது.

18 வயது பெற்றவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. பேச்சுரிமை, பிரசுர உரிமை, சங்க உரிமை, மத உரிமை முதலியன வழங்கப்பட்டிருப்பதோடு, அதே காலத்தில் வரி கொடுத்தல், இராணுவ சேவை ஆகிய பொறுப்புகளையும் குடிமக்களிடம் புகுத்தப்பட்டுள்ளது.

1949-ம் ஆண்டு முதல் கொண்டு அமுலில் இருந்து வரும் இடைக்கால அரசியல் திட்டத்தையே, புதிய சட்டம் பெரும்பாலான இனங்களில் ஒத்து இருக்கிறது.

தேசிய சபை தனது தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் நான்கு ஆண்டுகாலம் பதவியிலிருக்கவும் சட்டம் இடம் தருகிறது.

விசேஷ அதிகாரம்

முதல் மந்திரியை நியமிக்கவும், அதிகாரிகளை நியமிக்கவும் விரட்டவும், அரசியல் சட்டத்தைத் திருத்தவும் சட்டங்களை இயற்றவும், வரவு-செலவு திட்டங்களை உருவாக்க, பொருளாதார திட்டங்களில் முடிவு கூறவும், தலைவருக்கு, விசேஷ அதிகாரத்தைத் தந்துள்ளது அரசியல் சட்டம்.

'அரசாங்க நடவடிக்கை அமைப்பு' என இதுவரை பெயர் பெற்றிருந்த மத்திய சர்க்கார், புதிய சட்டம் நடைமுறைக்கு வந்ததும், 'தேசிய நடவடிக்கை அமைப்பு' எனும் பெயர் பெறும். அதுவே, சீனுவின் உயர் ஆட்சி அமைப்பாகும்.

சீனுவை பல மாநிலங்களாகவும், நகரங்களாகவும் பிரிக்கவும், அங்கெல்லாம் மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்தவும், மக்கள் சபையை உருவாக்கவும் புதிய சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது.

'தமிழ் ராஜ்யமென்பது தனி ராஜ்யமா?'

'யாருக்கெதிராக நேரடி நடவடிக்கை?'

கலந்து பேசி சிக்கல் தீர்க்கலாமாம்!

ம. பொ. சி. போக்கு: காமராஜர் மாற்றம்!

"யாருக்கு விரோதமாக நேரடி நடவடிக்கை? நேரு சர்க்காருக்கு எதிராகவா அல்லது மாநில சர்க்காருக்கு எதிராகவா அவர்கள் நேரடி நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?"

"தமிழ் ராஜ்யம் வேண்டுமென தமிழரசுக் கழகத்தார் கேட்கிறார்களே! இதன் பொருள் என்ன? தனி ராஜ்யம் அவர்கள் கேட்கிறார்களா? — இந்தக் கேள்விக்கு அவர்கள் ஏன் தெளிவான பதில் தருவதில்லை. இதுபற்றி அவர்கள் ஏதேனும் இரகசிய முடிவு வைத்திருக்கிறார்களா? அந்த முடிவை வெளியிட அவர்கள் பயப்படுகிறார்களா?"

—இவ்வாறு ராணிப்பேட்டையை அடுத்த சோளிங்கரில், சென்னை முதன் மந்திரி திரு. காமராசர் பேசுகையில் தமிழரசுக் கழகத்தவரின் நேரடி நடவடிக்கை பற்றி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திருப்பதியில் உள்ள தமிழர்களின் குறைகளை ஆந்திர சர்க்காரும், சென்னை சர்க்காரும் சமரசமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக, திருப்பதி வாழ் தமிழ் வியாபாரிகள், தங்கள் கணக்குகளை தமிழிலேயே வைத்துக் கொள்ள ஆந்திர அரசு சம்மதித்திருக்கிறது. இதைப் போன்றே திருப்பதி தமிழ் மாணவர்களின் போதனு மொழிப் பிரச்னையையும் இரு மாநில அரசுகளும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்."

திராவிடத்தின் கனிப் பொருள்கள்

ஆராய்ச்சி நடைபெறும்

பெங்களூர், ஜூன் 16—

தென் இந்திய ராஜ்யங்களின் பூதத்துவ ஆராய்ச்சியைப் பற்றி அறிய இயற்கை வளப்பொருள்கள் விஞ்ஞான இலாகா இம்மாதம் 24-ந் தேதியன்று ஒரு மாநாடு கூட்டுகிறது.

இராமநாதபுர மாவட்டத்தில் கருங்கல் பாறைகளை வெட்டி எடுப்பது பற்றியும், நாங்குனேரி தாலுகாவில் உள்ள உலோக சத்துடைய கற்கள் பற்றியும் ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்று சென்னை அறிவித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில், ஜிப்சம் உப்பு, காசர்கோடு தாலுகாவில் உள்ள இரும்பு, மைகா சுரங்கள் ஆகியவை பற்றியும், ஆராய்ச்சி நடத்தும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், ஏர்க்காடு தாலுகாக்களில் மண்ணிற்குக் கீழ் தண்ணீர் எங்கே கிடைக்குமென்று ஆராய்ச்சி நடத்தும்படியும் சென்னை சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறது.

டெலிபோன்

இந்தியாவுக்கும் — மலேயாவுக்கு மிடையே நேரடியாக டெலிபோன் சர்வீஸ் ஆரம்பமாகிவிட்டது என்று தெரிகிறது.

சர்ச்சில்—ஈடன்

அமெரிக்கா செல்வர்

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், வெளிநாட்டிலாகா அமைச்சர் அந்தோணி ஈடனும் அமெரிக்காவுக்கு இம்மாதம் 25-ம் தேதி செல்வார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவரின் அழைப்பின் பேரில் இவர்கள் செல்லுகின்றனர்.

மேற்கு வங்க உணவு நிலைமை திருப்திகரம்

ஏழாண்டுகளில் இல்லாத விலை இறக்கம்

கல்கத்தா, ஜூன் 17—

சென்ற ஏழு ஆண்டுகளில் மேற்கு வங்கத்தில் உணவின் விலை இதுபோன்று மலிவாக இருந்ததில்லை என்று மே. வங்க உணவு அமைச்சர் பி. சி. சென் கூறினார்.

அரிசியைப் பொறுத்தமட்டில் தேவை உள்நாட்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டதாம்.

கூடிப் பேசுகிறார்கள்!

மத்திய அரசாங்க வெளிநாட்டிலாகா, காமன்வெல்த் செயலாளர் என். டட், சென்னை முதன் மந்திரி காமராசர், இலங்கையின் இந்தியத் தூதவரின் செயலாளர் வி. சித்தார்த்தாச்சாரி ஆகியோர் இலங்கை இந்தியர் பிரச்னை குறித்து இன்று சென்னையில் கூடிப் பேசுவார்கள் எனத் தெரிகிறது.

புதுவையில் பிரெஞ்சு இராணுவம்

வெடி மருந்து, ஆயுதங்கள் குவிக்கப்படுகின்றன!

புதுச்சேரி, ஜூன் 16—

"வியட்நாம்" என்ற கப்பலில் 56 பிரெஞ்சுத் துருப்புகளும் 10 இராணுவ அதிகாரிகளும் புதுச்சேரியில் வந்து இறங்கினார்கள்.

இந்தோ-சீனுவிலிருந்து வரும் இக்கப்பலின் வருகை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

கப்பலில் ஏராளமான ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த இராணுவத்தினர், பிரெஞ்சிந்தியாவில் போலீஸ் நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

இந்தியாவின் எதிர்ப்பு

பிரெஞ்சுத் துருப்புகளின் வருகையை ஆத்திரமூட்டும் செய்கையாக இந்திய சர்க்கார் கருதுகின்றனர். பிரெஞ்சிந்தியப் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டி இந்தத் துருப்புகளை உடனே வெளியேற்ற வேண்டுமென்று ஆட்சேபக் குறிப்பொன்றை இந்திய சர்க்காரின் வெளி விவகாரக் காரியதரிசி, புதுடில்லியில் உள்ள பிரெஞ்சுத் தூதராலய அதிகாரியிடம் கொடுத்திருக்கின்றனர்.

மறுப்பு

புதுச்சேரியில் துருப்புகள் இறக்கப்பட்டிருக்கின்றன என்று வெளியான செய்தியை பிரெஞ்சு வெளி நாட்டிலாகா அதிகாரிகள் மறுத்தனர்.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் அமைதியைப் பாதுகாக்கும் பொருட்டு அனுப்பப்பட்ட 50 போலீசாரைப் பற்றிய செய்தித்தான் இப்படி துருப்புகள் வந்திறங்கின என்று சொல்லப்படுகிறது என்று அந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

முன் ஏற்பாடு

பாரிசில் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போதே இந்த ஏற்பாடுகளை பிரெஞ்சு சர்க்கார் செய்திருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது.

ஹக் மீது தேசத் துரோக வழக்கு?

கராச்சி சர்க்கார் மும்முரம்!

பாஷானியும் விசாரிக்கப்படுவார்?

கராச்சி, ஜூன் 16—

கிழக்கு வங்கமுன்னாள் முதல் அமைச்சர் பஸ்லுல் ஹக் மீது தேசத் துரோக குற்றம் சாட்டி வழக்குத் தொடர பாகிஸ்தான் சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

ஹக்குடன் மௌலானா பாஷானியும் விசாரிக்கப்படுவார் என்று கராச்சி உருது இதழ் ஒன்று தெரிவிக்கிறது.

ஹக், பாஷானி, சுஹ்ரவர்தி ஆகிய மூவரும் நடந்த தேர்தலில் கூட்டாக வேலை செய்தனர்.

நம் நாடு
தி.மு.கழக இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 17—6—54 வியாழன்

தட்டிக் கேட்க வேண்டும்

வறுமை மாய்ந்து வளம் பெருக, நாட்டில் சிறிய பெரிய தொழில்கள் பல கண்டாக வேண்டும். அப்போதுதான் செல்வம் கொழிக்கும்! சீர் சிறக்கும்! மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும்!

இந்நிலையை நாட்டில் காண நானாவிதமான எழில்மிக்கத் திட்டங்களைத் தந்துள்ளனர், நாடாள வந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள்! திட்டத்தைத் தீட்டித் தந்துள்ள வரையில் அவர்கள் நெஞ்சு வஞ்சக மறியாதது என்பதை, விவாதத்திற்காகவேனும் ஒப்புக் கொள்ளலாம்.

ஏட்டில் தீட்டப்பட்டுள்ள திட்டங்கள், நூற்றுக்கு நூறும் அப்படியே வெற்றி பெற்றுவிட்டால், திட்டத்தில் எதிர்பார்க்கின்றபடி விளைவுகள் ஏற்பட்டால், ஆளவந்தார்கள் தேனினும் இனிக்கக் கூறுகின்றபடி, நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறுவர் என்பதில் ஐயமில்லை.

அப்படி கிடைக்கும் செல்வப் பெருக்கத்தை, என்ன செய்வது? எவ்வாறு பயன்படுத்துவது? எப்படி உபயோகித்தால், குறைந்த செலவில் நிறைந்த இன்பத்தை அடைவது?—என்பன போன்ற அறிவை மக்கள் பெற்றிருப்பது மிகமிக முக்கியம். முக்கியம் என்பது மட்டுமல்ல — எல்லாவற்றிற்கும் முன்னேற்பாடாக, முதற்கண் இருந்தாக வேண்டியது கட்டாயம்.

மூளை முயற்சியால், உடல் உழைப்பால், இயந்திரத்தின் துணையால், ஒன்றுக்குப் பலவாக படைத்துக் குவிக்கப்படும் செல்வம், அதை நல்ல முறையில் சிக்கனமாகப் பயன்படுத்தும்வகை — நுண்ணறிவு மக்கள் பெற்றிலாத காரணத்தால், சிறப்படையாது! பாழ்பட்டுப் பெற்ற செல்வம் சீரழியும்—அதைப்பெற்ற மக்களும் அதனால் சுகமடையாது; முடிவில் சலிப்புக் கொள்வர்.

எனவே, செல்வத்தை ஆக்குவதற்கு முன்னதாகவே, செல்வம் எதற்கு, செல்வத்தால் மக்கள் சமுதாயம் எவ்வாறு சுகம் பெறும், என்றத் துறைகளிலெல்லாம், மக்கள் போதிய அறிவு பெற்றவர்களாக இருந்தாக வேண்டும். அவ்வறிவு பெறுபவர்கள், செல்வம் பெற்றும் பெறுதவர்களாகவே வாழ்வில் இடர்படுவர்—பிறர் பரிகாசத்திற்கும் ஆளாவர்!

பலவண்ண நறுமண மலர்களை ஆரமாகத் தொடுத்து காதல் மொழி பேசி மகிழ்வூட்டும் இதுவரைக் கிழத்தியின் முடியில் சூட்டி, அதனால் அகமட்டமுதியின் விழிகள் மகிழ்ச்சியை உமிழ, அது கண்டு, கொண்டவன் உள்ளப் பூரிப்படைவது இயல்பு—அதுகாலே, சூட்டும் மணமலர்பெற்றதின் முழு நோக்கத்திற்கும் வெற்றி கிட்டுகிறது.

இதை விடுத்து, பலநிற மணமலரை கண்ணைக் கவரும் கனின் பெறும் மாலையாகத் தொடுத்து, மரத்துக்கு மரம் தாவும் மந்திக்கு இட்டு. அதை, அம்மந்தி பிய்த்துப் பிய்த்துப் பல பக்கங்களிலும் எறிவதைக் கண்டு, 'இதோ மணமலர் பெற்றேன்—அதன் பயன் நிறைவேறவும் பெற்றேன்' என்று, மலர் தேடினவன் ஆனந்தத் தாண்டவம் புரியக் கிளம்பினால், அவன் வேடிக்கையை எவ்வாறு அறிவுடையோர், அறிவு நிரம்பியச் செயலெனக் கொள்வர்!

மலரை எப்படி எப்படி உற்பத்திச் செய்வது என்பதை மட்டும் ஒருவன் சிறப்பாகத் தெரிந்திருப்பது போதாது; மலரின் தேவையும், அதை உயர்ந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளும் அறிவாற்றலும் ஒருவனுக்குக் கட்டாயம் இருந்தாக வேண்டும்.

பட்டாடை நெய்யத் தெரிந்த நெசவாளி சிற்றுடை நெய்து தன் செல்வச் சிறுமிக்குக் கட்டிக் களிப்படைவதை விடுத்து, பெற்ற சிறுமி பிறந்த கோலத்தில் திரியும் போது, தெருக்கோடி இடிந்த கோயில் பெண் சிலைக்குச் சுற்றி பரவசம் கொண்டால் நெசவாளி சிற்றுடையை தன் உழைப்பால் தேடியதைக் காட்டிலும் தேடாமலே கிடப்பது மேல் என்றுதானே புத்தியுடையோர் புகல்வர்?

எனவே, பட்டும் நூலும் நெய்யக் கற்றுக் கொள்வது மட்டும் போதாது; பட்டையும் நூலையும், எதற்கு, எவ்வாறு பயன்படுத்துவது என்ற பேரறிவையும் ஒருவன் பெற்றிருக்க வேண்டும்—இல்லையேல், அவன், பொருளைப் பெற்றிருப்பதும் ஒன்றுதான்; இல்லாது இருப்பதும் ஒன்றுதான்!

முழு தேங்காயைக் குரங்கு உருட்டிக் கொண்டிருக்காமலா கிடக்கும்? உடைத்தா, உண்டு பசியாறப் போகிறது? சிறக்க

காங்கிரஸ் ஆளவந்தார்கள் திட்டியுள்ள திட்டங்களை நிறைவேற்ற, தேசிய திட்டக் கடன் என்ற பெயரில், நாட்டு மக்களிடம் கடன் பெறும் முயற்சி தீவிரமாகச் செய்யப்பட்டு வருகிறது.

'தேசிய திட்டக் கடன் பண நோக்க மட்டுமின்றி மற்றும் தத்துவ ரீதியாகவும் முக்கியமானது.'

இந்த உண்மையை எடுத்துக் காட்டி, மக்கள் சபை உறுப்பினரும், சட்டசபை உறுப்பினரும் இதை வற்புறுத்திக் கூறவேண்டுமென, நகரசபைகளுக்கும், சிற்றூர் மக்களுக்கும் எனப் பிரதமர் என்ற முறையில் பண்டித நேரு, மாநில முதல் மந்திரிகளுக்கு எழுதிக் கொண்டுள்ளார்.

திட்டம், பணம் பெறுவது என்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை; மக்களின் மனோநிலைத்தைதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை, நாட்டு மக்களுக்கு அறிவிக்க, [illegible] அனுப்புகிறார் பண்டிதர்!

தேசிய திட்டக் கடனுக்கு மக்கள் பணம் மட்டும் கொடுத்தால் போதாது. திட்டத்தின் இன்றியமையாமையையும் முக்கியத்தையும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும், அதற்கான மனப்போக்கு மக்களிடம் உருவாக வேண்டும், அதை வலியுறுத்தும் முறையில் தூதுவர்கள் பணி புரிய வேண்டும் என்று பண்டிதர் ஆசைப்படுகிறார்; அறிவிப்பு விடுக்கிறார்!

பண்டிதர் கோருவது—காண விரும்புவது நியாயமானதேயாகும். மக்களின் இன்றைய மனப் போக்கு, மாசுபட்டுக் கிடக்கிறது! எது வாழ்வளிக்கவல்லது; எது தாழ்வு தரக்கூடியது என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக மக்கள் உள்ளனர் என்பதை, பண்டிதர் அறிந்தே இருக்கிறார்.

எதை மேற்கொள்வது? எதை உதறித் தள்ளுவது? என்பதை மக்கள் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, அவர்கள் அறிவுக் கண் குருடாக்கப்பட்டுக் கிடக்கிறது என்பதையும் பண்டிதர் தெரிந்திருப்பதினால்தான், திட்டத்திற்குப் பண மட்டுமென்றி, மனோதத்துவ ரீதியாக மக்களின் ஆதரவு தேவை எனக் கூறுகிறார்.

திட்டத்திற்கு ஆதரவாக மக்களின் மனப்போக்கு உருவாக வேண்டும் என, தம் விருப்பத்தை ஐபகத்திற்கிடமின்றி அறிவித்து விடுவதால் மட்டும், அது கிடைத்து விடுமா? அவ்வளவு சுலபமாகவா, பண்டிதரே கேட்கிறார் என்பதற்காகவா வேறொரு துறையில் வேர் விட்டுக் கிடக்கிற மக்களின் மனப்போக்கு, மாறிவிடப் போகிறது?

அதற்கான திட்டம் தேவை! தீவிரமான திட்டம் தேவை!

திட்டத்தை நிறைவேற்ற, இன்னல் பல எதிர்பார்த்து, இடையறாது உழைக்கும் நெஞ்சுரம் கொண்ட அறிவுப் படை தேவை! பண்டிதர் ஒப்புகிறாரா, அத்தகைய படையை உருவாக்க? அப்படை, ஊர் ஊராகச் சென்று மக்களின்மனமாசைக்களைந்து, புதிய விழிப்பைத் தரும் உற்சாகத்தோடு உழைக்கும் போது, அதை சட்டம் எனும் வாள் கொண்டு வெட்டி வீழ்த்த முன்வராது, பண்டிதர் பரம்பரை இருக்குமா?

பண்டிதர், நாட்டின் பிரஜையாக மட்டுமிருக்கவில்லையே, கோல் பிடித்துள்ள கோமாளியாகவுமல்லவா கொலு வீற்றிருக்கிறார்? எப்படி, அவர், மக்கள் புது நோக்குப் பெறுவதற்கு, அறிவுப்படையினர் எடுக்கும் முயற்சியை, அடக்கி ஒடுக்க முன்வராமல் இருப்பார்? அவர் இருக்க ஒருப்பட்டாலும், கூடத் தோழர்களாக கொலுவில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கனவான்களும்—கனபாடிகளும் சும்மா இருப்பாரா?

இதோ பாரீர்! திருமலை வெங்கடாசலபதி, கல்லாகவும் இருக்கிறார்—வெண்கலச் சிலையாகவும் இருக்கிறார்!

ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்திய உபகண்டத்தை விடுவிக்கப் போரிட்டு, அவர் கரம் துண்டிக்கப்பட்டு விடவில்லை! ஆலையிலே வேலை செய்து, முன்மையான பொறிக் கிடையே சிக்கி, கரத்தை இழந்துவிடவில்லை!

பல காலம் உழைத்து உழைத்து, முதுமை பருவத்தில், இளமையில் மேற்கொண்ட விடா உழைப்பின் காரணமாக, அவர் கரம் சோர்ந்து பயனற்றுப் போகவுமில்லை!

இருந்தாலும், வெங்கிடாசலபதி வெண்கலச் சிலைக்கு ஏறத்தாழ மூன்று லட்ச ரூபாய் செலவில், தங்கக் கை மூடி போடப்பட்டு இருக்கிறது!

அவர் என்ன சந்திர சிகிச்சை கற்ற ஆங்கில அறுவை மருத்துவ நிபுணரா? நகக் கண்களில் உள்ள அழுக்கு, பிணியாளனின் பிளவு படுத்தப்பட்ட இரணத்துக்குள் சென்று, புது கோளை உண்டாகப் போகிறதே என அஞ்சி, பொன் தகட்டுக் கையுறையை மாட்டிக் கொள்ள?

அப்பொன் கையுறையில் பதிக்கப்பட்டுள்ளன, வைரக் கற்களும், மரகதக் கற்களும், இன்னோரன்ன விலை உயர்ந்த கற்களும்!

இதுகண்டு பக்தர்கள் பரவசப்படலம்! எத்தர்கள் இரும்பூதெய்தலாம்! 'ஏமாளிகள் இன்றும் உள்ளனர்! எவர் எம்மை எதிர்த்தாலும் எம் வாழ்வு அஸ்தமனமாக இன்னும் பல ஆண்டு செல்லும்' என எக்காளமிடலாம், வஞ்சகர்கள்!

மக்களின் மனப்போக்கு, செம்புச் சிலைக்கு அவசியமற்ற தங்க மூடி போடும் நிலையில் உள்ளது!

நாட்டு வித்தையிலும், மக்கள் நல்வாழ்வு தேடுவதிலும் ஈடுபட்டு, கரங்களிழந்தோர், கால்களைக் காணிக்கையாக்கினோர் ஆயிரமாயிரமாக இருக்கின்றனர், இங்கு! வேலைக்குத் தகுதியற்றவர் எனப் பழிக்கப்படுகின்றனர்; அவர்கள் ஒதுக்கப்படுகின்றனர்!

அவர்களுக்குத் தேவைப்படுகிறது — 'பினான்டிக' கரங்கள்! கனத்த ரப்பர் கால்கள்! அவைகளைக் கொடுக்க ஆட்கள் இல்லை! தேவையைப் பூர்த்திச் செய்ய பணமில்லை! வெண்கலச் சிலைக்கு, வைரம் பதித்த பொன் கையுறையாம்—வெட்கம்! வேதனை தரும் வெட்கம்!

இப்பாழ் மனப்போக்கு, மக்களை விட்டு அகல வேண்டும்! அகற்றுவதற்கு, சிறந்தோர் அறிவுப் படை வேண்டும்! அந்த அறிவுப் படை, அந்தப் பொருளற்றப் போக்கைத் தட்டிக் கேட்க வேண்டும்! காங்கிரஸ் ஆளவந்தார்களும் அதையே செய்ய முன்வரவேண்டும்! வருவார்களா?

'இலங்கை மயக்கொள்கை: சிலோன் தீவிரம்

தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொல்லச் சதி

தேசாய் கூறும் 'சாதாரணம்' இதுதானா?

கொழும்பு, ஜூன் 14—

இலங்கை அரசு, தனது, வேலைகளை இலங்கையர் மயமாக்கும் கொள்கைக்கு எதிராகக் கிளம்பும் எத்தகைய எதிர்ப்புகளையும் சமாளிக்க ஆயத்தமிருக்கிறதாம்.

வேலை நிறுத்தம் போன்றவைகளைச் சமாளிக்கவும் தயாராக்கிக் கொள்கிறதாம்.

தங்கள் அனுமதிச் சீட்டுகளை புதுப்பிக்கக் கோரிச் செய்துள்ள 25,000 மனுக்கள் பைசல் செய்யப்படாமலேயே வைக்கப்பட்டுள்ளதாம். இதனால் இவர்களில் யாரும் இந்தியாவுக்கு வரவோ, இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பத்தாருக்கு பணம் அனுப்பவோ இயலாது போய்விட்டுள்ளது. இவர்கள் பற்றி இலங்கை அரசு ஒரு முடிவு எடுக்கும் வரை. இதனால் கடந்த 5 அல்லது 6 மாதங்களாக, ஆயிரக்கணக்கான இலங்கை இந்தியர் தங்கள் தாயகத்தில் உள்ள குடும்பத்தாருக்குப் பணம் அனுப்ப இயலாது போய்விட்டது. தங்களின் 'பாஸ்போர்ட்'டைக் காட்டினால்தானே, தபால் நிலையத்தில், பணம் அனுப்ப அனுமதிப்பார்கள் 'பாஸ்போர்ட்' தான் அரசாங்கத்திடம் சிக்கிக் கொண்டதே!

அதே காரணத்தினால் ஜூன் முதல் தேதியிலிருந்து இன்னும் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களும், தங்களின் அனுமதிச் சீட்டின் காலம் முடிந்துவிடுவதால், எதுவும் பணம் அனுப்ப இயலாது.

காட்டுமன்னார்குடியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு வரவேற்பு

சிதம்பரம், ஜூன் 16—

சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார்குடி திராவிட முன்னேற்றக் கழகம், சுற்று வட்ட தி.மு.கழகக் கிளைகள் சார்பில், 12—6—54 மாலை 6-30 மணிக்கு சிவன் கோவிலுக்கு எதிரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. உள்ளூர், வெளியூர் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்தனர். தோழர் பொ. சொக்கலிங்கம் அவர்கள் தலைமை வகித்து முன்னுரை கூறினார். சிதம்பரம் தோழியர் சாந்தகுமாரி குழுவினர் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர்கள்: பா. ந. இராமலிங்கம், ப. வைத்திலிங்கம்; ஆர். பாலகுருசாமி, தில்லை வில்லாளன், அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும், சமூக - அரசியல் - பொருளாதார விடுதலைக்காகப் பணியாற்றி வரும் சிறந்த நோக்கங்களைப் பற்றியும், மும்முனைப் போராட்டத்தில் நாம் அடைந்த வெற்றியைக் குறிப்பிட்டும் பேசினர். திராவிட நாடு திராவிடருக்கு ஏற்பட்டால்தான், திராவிட மக்கள் வாழ்வு உயருமென்றும், வடநாட்டார் சுரண்டல் ஒழிக்கப்படாதவரை நாம் முன்னேற முடியாதென்றும் குறிப்பிட்டனர்; தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு பல கழகங்கள் சார்பில் மலர்மாலைகள் சூட்டப்பட்டது; கைத்தறி நெசவுத் துண்டுகளும், வாழ்த்து மடலும் வழங்கப்பட்டன.

மக்கள் பிரதிநிதிகளைக் கைது - செய்து சிறையில் தள்ள!

— (:) —

சட்ட சபை பகுதியிலும் பாதுகாப்புச் சட்டம் பாயும்!

உறுப்பினர் உரிமைக்கும் உலைவைக்க சூழ்ச்சி!

சட்ட சபை தலைவர்கள் மாநாட்டில் சலசலப்பு

ஸ்ரீநகர், ஜூன் 15—

ஒரு அங்கத்தினர், சட்ட சபையிலேயே தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாமா என்ற பிரச்சினை விவாதிக்கப்பட்டு, சட்டம் அதன் நடைமுறைப்படி செயல்பட விட்டுவிட வேண்டுமென்று சட்டசபைத் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய மாநிலங்களின் சட்ட சபை சபாநாயகர்கள், மேல் சபைத் தலைவர்கள், உபதலைவர்கள் ஆகிய 56 பேர்கள் இங்கு மாநாடு ஒன்றில் கூடியுள்ளனர். அவர்களுடன் அவர்களின் செயலாளர்கள் 45 பேரும் வந்துள்ளனர். அந்த சபாநாயகர்களின் மாநாடு மூன்று நாட்கள் நடைபெறும் எனத் தெரிகிறது.

கவர்னர்கள், தலைவர்கள் பேசும்போது, சபையிலிருந்து வெளியேறுதல் போன்ற அங்கத்தினர்களின் நடவடிக்கைகளை எப்படி சமாளிப்பது என்ற பிரச்சினையில் மாநாட்டில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

அத்தகு சபை வெளியேற்றம் செய்யும் அங்கத்தினர்களுக்கு ஏதேனும் தண்டனை தரும் வகையில், அரசியல் சட்டத்தை திருத்தவோ அல்லது, புதிய ஒழுங்கு முறைவிதிகளைத் தோற்றுவிக்கவோ வேண்டும் என ஒரு சாரார் கருதினர்.

இன்னொரு சாரார், "இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை; இதை அங்கத்தினர்களின் நல்லறிவின் முடிவிற்கே விட்டுவிட வேண்டும்; அவர்களே, இந்திய அரசியல் சட்டத்திற்கும், அந்தச் சட்டத்தின் அதிகார மூர்த்திகளுக்கும் மரியாதை தரும் வகையில் நடந்து கொள்ளும் மனப்பான்மை வளர்த்துக் கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும்," எனக் கருதினர்.

ஆந்திராவில் தொழிற்கூடம்

ஆந்திர அரசாங்கம், சாமல்கோட் பயிற்சி நிலையத்தில், தச்சு வேலை, பட்டறை வேலை, வீடு கட்டுதல் போன்ற தொழில்களைக் கற்பிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக, இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தாரிடமிருந்து ஒன்றேகால் லட்சரூபாய் பெறும் எனத் தெரிகிறது.

கடித மூலம் எதிர்ப்பு

அகமதாபாத் தொழிலாளர்களின் புதிய வழி

அகமதாபாத், ஜூன் 15—

திட்டக் கமிஷன் மில் தொழிலில் செய்ய இருக்கும் மாறுதல்கள் சிலவற்றை எதிர்க்க அகமதாபாத்தில் கம்யூனிஸ்டு ஆதிக்கமுள்ள மில் தொழிலாளர்கள் சங்கம் ஒரு புது முறையைக் கையாண்டிருக்கிறது. அவர்கள் எதிர்ப்பு தபால் கார்டுகளை அனுப்புகின்றனர்.

ஆட்டோமாடிக் தறிகளை உற்பத்தி செய்வது, அவைகளை இறக்குமதி செய்வது இவைகளைத் தடை செய்யுமாறும், மில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யக்கூடாது என்று சட்டமியற்றுமாறும் தபால் கார்டுகளில் எழுதி கையெழுத்திட்டு தொழிலாளர்கள் திட்டக் கமிஷன் தலைவருக்கு அனுப்புகின்றனர்

இம்மாதிரி 15,000 கார்டுகள் அனுப்பப்படுமாம்.

படித்தவர்களிடையே - வேலையில்லா திண்டாட்டம்

திரு-கொச்சியில் அதிகம் என்று தேஷ்முக் அறிவிப்பு

மக்கள் தொகை பெருக்கமும் வசதிக் குறைவுமே காரணங்களாம்!

எர்ணாகுளம், ஜூன் 16—

'படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் திருவிதாங்கூர்—கொச்சியில்தான் அதிகமாக இருக்கிறது; படித்தவர்கள் அதிகமாக இருப்பதும், மக்கள் தொகை பெருக்கமும்தான் இதற்குக் காரணங்களாகும்" என்று இந்திய நிதி அமைச்சர் தேஷ்முக் கூறினார்.

சர்க்கார் இதுபற்றி அடிக்கடி நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

மற்ற ராஜ்யங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இருக்கும் வசதிகளில் சில, திருவாங்கூர்—கொச்சிக்குக் கிடையாது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மத்திய திருவாங்கூர் பகுதியில் உள்ள நிலங்களைப் பயிர்த்தளிப்பதன் மூலம் மக்கள் நெருக்கத்தைக் குறைக்க முடியும் என்று அவர் யோசனை கூறினார்.

திருவாங்கூர்—கொச்சி மக்கள் எங்கெங்கே வாழ்க்கை நடத்த வசதிகள் இருக்குமென்று தெரிகிறதோ, அங்கே சென்று வாழ்க்கை நடத்துவதில் திறமைசாலிகள் என்று தேஷ்முக் தெரிவித்தார்.

காந்தியம் பேசும் காங்கிரஸ் ஆளவந்தார்கள் போக்கு!

'டாங்கி'கள் தயாரிக்க பிரிட்டன்—ஜெர்மனியுடன் பேரம்!

இராணுவத்திற்குத் தேவையான 'டாங்கி'கள் அனைத்தையும், இந்தியா, தானே உற்பத்தி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. டாங்கிகளைச் செய்வதென்றால், அதை ஜெர்மன், அல்லது பிரிட்டிஷ் மாதிரியில் செய்வதா என்பது பற்றியும், சீக்கிரமே இந்திய சர்க்கார் முடிவு செய்வார்கள் என்றும், அதற்காக ஆங்கில, அல்லது ஜெர்மன் கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்வார்கள் என்றும் தெரிகிறது.

இந்த முடிவின் மீது பலவிதமான, தேசிய, உலக முக்யத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன.

நாட்டிற்குத் தேவையான எல்லா டாங்கிகளையும் வெளிநாடுகளிலிருந்தே வாங்குவதென்றால், போர்க் காலங்களில் டாங்கிகளை வாங்குவது கடினமாயிருக்கும். டாங்கிகள் உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளை இந்தியாவில் ஏராளமான செலவில் அமைத்து விட்டால் போர் முடிந்த பின்னர் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வேலை யிருக்காது. மேலும் டாங்கிகளை சிவில் உபயோகத்துக்கு மாற்றுவதும் இயலாத காரியமாகும்.

டாங்கிகளைச் செய்வதில் ஜெர்மன், பிரிட்டன் என்ற இரண்டு மாடல்களையும் சர்க்கார் யோசிக்கின்றனர்.

ஜெர்மன் கம்பெனி ஒன்று சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறதாம். அந்த டாங்கிகள் மிகவும் லேசாக இருக்குமென்றும், பெரிய தாக்குதலைச் சமாளிக்க முடியாதென்றும் கருதப்படுகிறது.

சென்னை அசோக் மோட்டார் கம்பெனியுடன் சேர்ந்து இந்தியாவில் தொழில் செய்யும் 'லேலண்டு மோட்டார்ஸ்' என்ற கம்பெனியார் இந்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்ய விரும்புகிறார்களாம். அந்த டாங்கிகள் மிகவும் கனமுள்ளதாக இருக்குமெனத் தெரிகிறது.

இப்பிரச்சினையில் முடிவு செய்வது இந்திய சர்க்காருக்கு மிகவும் கடினமாயிருக்குமென்று தெரிகிறது.

குருக்ஷேத்திரத்தில் - - சூரிய கிரகண விழா

இரு குளங்களில் ஐந்து லட்சம் பேர் குளிப்பார்கள்

மற்றொரு கும்பமேளா நடைபெறுமா?

சர்க்கார் செய்துள்ள ஏற்பாடுகள் விவரம்

சாந்திநகர், ஜூன் 16—

குருக்ஷேத்திரத்தில் ஜூன் 30-ந்தேதியன்று சூரிய கிரகணத்திற்காக 5 லட்சம் பேர் கூடுவார்கள் என்று தெரிகிறது.

ஜூன் 20-ந் தேதி முதல் 3-ந் தேதி வரை குருக்ஷேத்திரத்தில் சூரிய கிரகணத்தை ஒட்டி விழா நடைபெறும். அங்கே ஜூன் 30-ந் தேதியன்று அரைகுறையாக சூரியனின் மறைவு தெரியுமாம்.

அந்த நேரத்தில் குருக்ஷேத்திரத்தில் உள்ள 'சன்யாசத்' 'யேதிசா' என்ற இரண்டு குளங்களில் மூழ்கினால் 'புண்ணியம்' கிடைக்குமென்பது புராணமாம்! அன்று மட்டும் 5 லட்சம் மக்கள் அந்த இரண்டு குளங்களில் மூழ்கி எழுவார்கள் என்று தெரிகிறது

இந்த விழாவை ஒட்டி அதிகாரிகள் தேவையான முன்னேற்பாடுகள் செய்கின்றனர். விழாக் காலத்தில் 36 தனி ரயில்கள் விடப்படுமாம்.

குருக்ஷேத்திர ரயில்வே நிலையத்தில் மின்சார விசிறிகள் அமைக்கப்பட்டு, விளக்குகளும் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

புதிதாக ஏழு டிக்கட் விற்குமிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; மக்கள் வெளியே செல்ல மூன்று புதிய பாதைகளும் அமைத்திருக்கிறார்கள்.

70 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 'சன்யாசத்' குளத்தருகே உள்ள பாடியாலா ஹவுசில் தண்ணீர் சப்ளைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வெப்பத்தால் தாக்கப்படுவோருக்கு சிகிச்சை செய்ய நான்கு நிலையங்களும், முதல் உதவிக்காக பல இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் இம்மாதம் 15-ம் தேதி முதல் வேலை செய்யுமெதாம்.

இந்த இடத்திற்கும் டில்லி போன்ற பல இராஜ்யத் தலைநகரங்களுடன் கம்பியில்லாத் தந்தி தொடர்பு ஏற்படுத்தப்படுமாம்.

குருக்ஷேத்திரத்தில் ஏராளமான போலீஸ் ஸ்டேஷன்கள் அமைக்கப்படும். 2000க்கு மேற்பட்ட போலீஸ்காரர்கள் அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள் என்று தெரிகிறது.

சுகாதார அதிகாரிகள் குருக்ஷேத்திரப் பகுதி முழுமையும், ஈக்கள், கொசுக்கள் இவைகளை ஒழிக்க டி. டி. டி. மருந்தைத் தூவி உள்ளனர் என்று தெரிகிறது.

அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தில் கொண்டாட்டம்!

வெள்ளி மூஷிகம் மூளியாயிற்று!

விநாயகர் புழுதியில் உருண்டார்!

வாகனம் தூக்கி ஒருவரின் பரிதாப மரணம்

காஞ்சிபுரம் கச்சபேஸ்வர நாதர் கோவில் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. அதை ஒட்டி எல்லா 'சாமி'களும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

கீழ ராஜ வீதியை ஊர்வலம் வந்தடைந்ததும், பிள்ளையார் ஏறி வந்த வெள்ளி மூஷிக (பெருச்சாளி) வாகனம் பளு தாளாமல் விநாயகர் உருவச் சிலையுடன் தரையில் விழுந்து புரண்டது

சாமி தூக்கிவந்த 45 வயதுடைய குண்டன் என்பவர், விநாயகர் சிலையின் அடியில் அகப்பட்டு நசுங்கி மரணமடைந்தார்.

இறந்த குண்டனுக்கு ஒரு மனைவியும், ஆறு குழந்தைகளும் இருக்கின்றனர்.

சி. பி. ராமசாமி அய்யர்

காசி பல்கலைக் கழக துணைவேந்தராவார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராயிருக்கும் டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்தான் காசி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் போவதாக வெளியான செய்தி உண்மைதான் என்றார்.

ஜூலை முதல் வாரத்தில் அவர் தனது புதிய பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடும் எனத் தெரிகிறது

சிறு தொழில் வளர்ச்சி.

பணமுடையால் தடைபடவில்லையாம்

நல்லதோர் திட்டமில்லாததே காரணமாம்!

"சிறு சிறு தொழில்கள் வளர்வதற்கு, போதிய பணமில்லாமையை ஒரு தடையாகக் கொள்ளக்கூடாது. நல்லதோர் திட்டம் இருக்குமானால், அதை நிறைவேற்றுவதற்கான தொகையை எப்படியும் சேகரிக்க முடியும்."

"மத்திய அரசு, நான்கு வட்டார தொழிற் கழகங்களை நிறுவ எண்ணியுள்ளது. இந்தக் கல்வி நிலையங்கள், சாதாரண சிறு உற்பத்தியாளரையும், தொழிலாளியையும் அதிகத் திறமையுள்ளவனாக்குவதில முயற்சி செய்யும். இது வெற்றிகரமானதாயிருந்தால் அதிகமான அளவில் அத்தகு தொழில் கல்வி நிலையங்களைத் திறக்கவும் வேண்டியிருக்கும்."

—இவ்வாறு மத்திய அரசாங்க தொழில் வர்த்தகத் துறை மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, பம்பாயில் மாநில தொழில் வர்த்தகத் துறை அதிகாரிகள் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சிறிய அளவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் தயாராகும் பொருள்களுக்கு சந்தை தேடித் தர வேண்டியது மிக அவசியம். பெரிய அல்லது சிறிய தொழிற்சாலைகளின் உற்பத்திக் குறைவுக்கும் வளர்ச்சி இன்மைக்கும் காரணம், சரியான சந்தையும், விற்பனை நிலையங்களும் தேடித் தராமையே யாகும்."

"மாநில அரசுகள் சிறு தொழில் வளர்ச்சிக்காக கடன்கள் உதவ வேண்டும். அப்படிக் கடன் கொடுப்பதில் அதிகமான நஷ்டம் வரும் என மாநில அரசுகள் கருதினால் அந்த நஷ்டத்தில் ஒரு பகுதியை, மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள நான் வழி செய்கிறேன். சிறிய தொழில் வளர்ச்சிக்காக, உதவித் தேவையான பணத்திற்கும் வழி வகை காண முடியும்," என்றும் கூறினார்.

உலக அரங்கில்

கெய்ரோ :
மத்திய கிழக்கு பாதுகாப்பு ஒப்பந்தம், பாகிஸ்தான், துருக்கி ஒப்பந்தம் இவைகளைப் பற்றி அரபு லீகின் அரசியல் குழுவினர் கூடிப்பேசுவார்கள் என்று தெரிகிறது.

* * *

சகாராவில், முடிவடையாத பிரமிட் ஒன்றில் ஏராளமாகத் தங்க நகைகளும், வைரங்களும் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

★

நியூயார்க் :
ஐ. நா. பாதுகாப்பு சபையில் தாய்லாந்து, இந்தோ-சீன எல்லையில் பார்வையாளர்களை அனுப்ப வேண்டுமென்று பிரேரேபித்தது.

★

டமாஸ்கஸ் :
பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, துருக்கி-பாகிஸ்தான் ஒப்பந்தத்தில் மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் சேர்ந்துகொள்ளலாம் என்றார்; ஆனால், இஸ்ரேலை மட்டும் சேர்த்துக்கொள்ள இயலாது என்றார்.

* * *

சிரியாவில் நடைபெறப் போகும் தேர்தலை மேற்பார்வையிட நடுநிலைமையாக சிரியாவில் காபந்து சர்க்கார் ஒன்றை அமைக்கலாம் என்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

★

பாரிஸ் :
வியட்நாம் பிரதமர் பூலோக் என்பவரின் இராஜிநாமாவை பாவோ டாய் ஏற்றுக் கொண்டார். தேசியக் கட்சியின் தலைவர் டியோதின் டியூ என்பவரை சர்க்கார் அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

• • •

தனது காலனி நாடுகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால், பிரான்ஸ், ஐ. நா. சபையை விட்டு உடனே வெளியேற வேண்டுமென்று மடாக்ஸ்கர் பிரதிநிதி கூறினார்.

★

வாஷிங்டன் :
கொரியப் பிரச்சினைப் பற்றிப் பேசவும், கொரியா பற்றிய ஜினிவா மாநாடு தோல்வி அடைந்தது பற்றியும் அமெரிக்க காங்கிரஸின் இரு கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கலந்து பேசப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் அறிவித்தார்.

* * *

செனட்டர் மெக்கார்த்தியை விசாரணைக் குழுவின் தலைமைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று குடியரசுக் கட்சி செனட்டர் ரால்ப் பிளாண்டர்ஸின் பிரேரேபணையை நடைமுறைக் கமிட்டிக்கு அனுப்ப அமெரிக்க மேல் சட்டசபை தீர்மானித்தது.

★

கேப்டவுன் :
தென் ஆப்பிரிக்கப் பார்லிமெண்டை ஜனவரி 21-ந் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிகிறது. சமீபத்தில் பலரின் இனவாரி வாக்காளர் மசோதாவை பார்லிமெண்ட் நிறைவேற்றவில்லை.

★

நியூஸ்பர்க் :
மேற்கு ஜெர்மனியில் சுற்றுப் பயணம் செய்யும் இந்தியப் பத்திரிகையாளர் தூதுக் குழுவினர் டெமாக் இயந்திரத் தொழிற்சாலையைப் பார்வையிட்டனர். இந்தத் தொழிற்சாலை இந்தியாவில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முயற்சிக்கிறது.

பீட்டர் மாரிஸ்பர்க் :
மூன்று ஆப்பிரிக்கக் கைதிகளுக்கும், சிறை போலீசார் 80 பேருக்கும் இடையே நடைபெற்ற கைகலப்பில் ஒரு போலீஸ்காரர் மரணமடைந்தார்; இரு போலீசாருக்குக் காயம் என்று தெரிகிறது. சிறையிலிருந்து அந்தக் கைதிகள் தப்பியோட முயலுகையில், எதிர்த்த போலீசாரை துப்பாக்கியால் சுட்டனர் என்று தெரிகிறது.

★

லண்டன் :
பி.பி.சி. செய்தி ஒலிபரப்பு நிலயத்தின் சீன மொழிப் பிரிவின் அதிகாரி தன்னுடைய அறைச் சாவியை அங்கே தொலைத்துவிட்டு, வெளிப்புறமாக அறையினுள் ஏற முயற்சித்தபோது கீழே விழுந்து மரணமடைந்தார் என்று தெரிகிறது.

• • •

தேம்ஸ் நதியின் தென்கரையில் ஹெலிகாப்டர் விமான நிலயம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. லண்டனில் ஹெலிகாப்டர் போக்குவரத்துக்காக அமைக்கப்படும் முதல் நிலயம் இதுதான். லண்டன் விமான நிலயத்திலிருந்து இந்த ஹெலிகாப்டர் நிலயத்திற்குப் பிரயாணப் போக்குவரத்து சீக்கிரமே ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

★

இரங்கூன் :
பர்மிய சர்க்கார் தனது இராணுவ அதிகாரிகளுக்கும் நிபுணர்களுக்கும், மாணவர்களுக்கும் கட்டாயமாக இராணுவப் பயிற்சி அளிக்கவும், வர்த்தகப் பயிற்சி அளிக்கவுமான தேசியத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது.

* * *

சோவியத் சர்க்கார் அலெக்ஸி டெமிடோவிச் சிசியோபிரின் என்பவரை பர்மாவில் ரஷ்யத் தூதுவராக நியமித்துள்ளது.

★

ஜினிவா :
அகில உலக தொழிற்சங்கத்திற்கு அடுத்த மூன்றாண்டு காலத்திற்குரிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. இர

விபூதி வீரமுத்து பேசத் தடை

திருமங்கலம், ஜூன் 15—
13—6—54 மாலை வழியர் காங்கிரசின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசவிருந்த விபூதி வீரமுத்து பேசுவதற்குத் தடை உத்தரவு போடப்பட்டது.

காங்கிரசிலிருந்துகொண்டு எதிர்க் கட்சியினரை ஆபாசமான முறையில் தாக்கிப் பேசுவதை காங்கிரஸ் ஸ்தாபனத்தை களங்கப்படுத்துமெனக் கருதித் திருமங்கலம் போலீசார் அவர் பேசக் கூடாது என்று தடை விதித்திருப்பதாகத் தெரிகிறது

கழகத்தில் 69 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன.

★

சிங்கப்பூர் :
மலேயாவில் ஆகஸ்டு மாதத்தில் சுற்றுப் பயணம் செய்ய இருக்கும் ஐ. நா. சபைத் தலைவி திருமதி விஜயலட்சுமி பண்டிட்டை மலேயா சர்க்கார், தன் விருந்தாளியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு அழைப்பு அனுப்பியிருக்கிறது.

★

மெல்போர்ன் :
இந்தோ—சீனா பற்றிய பேச்சுவார்த்தைகளை ஒத்திப் போடுவதைவிட அவைகளை முடித்துவிடுவதே மேல் என்று ஆஸ்திரேலிய வெளிநாட்டு மந்திரி அமைச்சர் கேசி கருதுகிறார் என்று மெல்போர்னில் கருதப்படுகிறது

★

டுனிஸ் :
டுனிஷியாவில் பிரெஞ்சுத் துருப்புகள் வருகையை முன்னிட்டு டுனிஷிய முஸ்லிம் விவகார இலாகா அமைச்சர் இராஜிநாமா செய்திருக்கிறார்.

★

அக்ரா :
கோல்ட் கோஸ்டில் நடைபெற்ற தேர்தல்களில் க்வாம் நிக்ருமா என்ற 44 வயதான ஆப்பிரிக்கத் தலைவரின் மக்கள் கட்சி மிகப் பெரும் வெற்றியடைந்திருக்கிறதாம்.

★

கிளாஸ்கோ :
கிளாஸ்கோ சர்வகலாசாலை, வி. கே. கிருஷ்ணமேனனுக்கு 'டாக்டர் ஆப லா' என்ற கௌரவப் பட்டத்தை அளித்திருக்கிறது.

கழகக் கூட்டம்

★

பாப்பநாய்க்கன்பாளையம் பிள்ளையார் கோயில் பொது இடம்
19—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். ஆர். மாணிக்கம்
பேசுவோர் :
மதுரை எஸ். முத்து
பல்லடம் பொன்னுசாமி

ஆரணி (வ. ஆ.) தி. மு. க. செ. கு. உறுப்பினர் கூட்டம்

18—6—54 இரவு 9 மணிக்கு ஆரணி தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், பெரியகடை தெரு 'மறுமலர்ச்சி மன்றக்' கட்டடத்தில் நடைபெறும். அது போது, பல முக்கிய முடிவுகள் செய்யப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

18-6-54 மாலை 6 மணிக்கு வடசென்னை தியாகராயர் பகுத்தறிவு மன்றத்தில் தோழர் ப. கல்செழியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. செல்வராசன், டி. எம். என். மணி, சே. என். அப்துல் ரஹீம் ஆகியோர் பேசுவர்.

மதுவிலக்கை எதிர்த்து அறப்போர்

பலர் கைது

பீமாவரம் என்ற இடத்தில் மதுவிலக்கை எதிர்த்து அறப்போரில் ஈடுபட்ட புட்டியாகு ரங்காராயுடு என்பவர் ஜூன் 11-ல் கைது செய்யப்பட்டார். அதே போல் இருவரும், ஜூன் 13-ல் இன்னும் மூவரும் அங்கு கைதாயினர். மங்களகிரியில், சமீபத்தில் 12 முறைகள் மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு தலா இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை விதித்து குண்டூர் முதல் வகுப்பு நீதிபதி தீர்ப்பளித்தார்.

பாலூவாவில் ஜூன் 13-ல் 5 பேரும், 14-ல் 5 பேரும் கைதாயினர்.

இலங்கை சர்க்கார் எழுப்பிய கடன்

இலங்கை சர்க்கார் எழுப்பிய ரூ 7 கோடி கடன், சில மணி நேரங்களில் கேட்ட தொகைக்கு மேல் வசூல் ஆயிற்று என்று தெரிகிறது.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

★

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் 'அழகிரி பந்தல்' மூத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி :	27—6—54 ஞாயிறு :
சமுதாய சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர் : அழுத்து அடிகள்	தலைவர் : கே. ஏ. மதியழகன்
திறப்பாளர் : இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர் : நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், அரங்கண்ணல்; ப. உ. சண்முகம், என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், என். வி. நடராசன், கண்ணதாசன், ஏ. கோவிந்தசாமி, எம். எஸ். ஏ., இரெ. இளம்வழுதி, எம். எஸ். ராமசாமி, தூத்துக்குடி தோழர்கள் கே. வி. கே. சாமி, இரா. சு. தங்கப்பழம், நடராசன், சிவசாமி, ரத்தினம், நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, தோழியர்கள் சத்தியவாணிமுத்து, அருண்மொழி, பூங்கோதை மற்றும் திராவிட சட்டசபை எம். எல். ஏ.-க்களும், பல இயக்கத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

★

இசை முரசு நாகூர் ஹனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்!

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

'அம்மையப்பன்,' 'சந்திரமோகன்' நாடகங்கள் நடைபெறும்

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணா 8

—வரவேற்புக் குழுவினர்

செய்திக்கதிர்

மின்சாரம்
நாட்டின் வேலை வசதியைப் பெருக்குவதற்காக, அந்தந்த ராஜ்யங்களில் மின்சார அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்படி ராஜ்ய சர்க்கார்களை திட்டக் கமிஷன் கேட்டிருக்கிறதாம். நடைபெறும் ஆண்டில் இதற்காக ரூ. 11 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

★

மக்கள் சபை
இந்தியப் பாராளு மன்றம் ஆகஸ்டு மாதம் 23-ம் தேதியன்று கூடுமென்று தெரிகிறது.

★

சுற்றறிக்கை
சட்டசபை உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று டில்லி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு அறிக்கை ஒன்றை பண்டித நேரு அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

★

கள்ளக் கடத்தல்
சிரியாவிலிருந்து வந்த நபர் ஒருவரிடமிருந்து ஒன்றரை லட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை பம்பாய் விமான நிலயத்தில் சுங்க இலாகா போலீசார் கைப்பற்றினார்கள். அந்த நபரின் வெள்ளை கோட்டிலும், குட்கேசிலும் இத்தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

★

துப்பாக்கிப்பிரயோகம்
பரக்கஞ்சரி என்ற இந்தியா — மேற்கு பாகிஸ்தான் எல்லையில் இரு நாட்டு காவல் போலீசாரும், 72 மணி நேரம் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டனராம். பின்னர் இருதரப்பு அதிகாரிகளும் கூடி சுடுவதை நிறுத்த முடிவு செய்தனராம்.

★

நிபந்தனை
இந்தோ-சீனப் போர் நிறுத்த கமிஷனில் கொழும்பு நாட்டு நாடுகள் கலந்து கொள்வதற்கு முன்பு ஜினிவாவில் உள்ள இருதரப்பு வாதாசாரிடமிருந்தும் அழைப்பு வர வேண்டுமென்பது பூர்வாங்க நிபந்தனையாக இருக்க வேண்டுமென்று இந்தியா கருதுகிறது.

★

பஞ்சாயத்து மாநாடு
ஜூன் 25-ல் சிம்லாவில் கூடும் ராஜ்ய சர்க்கார் ஸ்தல ஸ்தாபன மந்திரிகள் மாநாடு கிராமப் பஞ்சாயத்துகளை சுயாட்சி உறுப்புகளாக மாற்றியமைக்க திட்டமொன்றை வகுக்கும் என்று தெரிகிறது.

★

ஆந்திர மாணவர்கள்
சென்னை வைத்தியக் கல்லூரிகளில் ஆந்திர மாணவர்களுக்கென்று 50 இடம் ஒதுக்கப்படும் என்று தெரிகிறது. இரு சர்க்கார்களிடையே ஏற்பட்ட 5 ஆண்டு ஒப்பந்தப்படிதான் இவ்வாறு இடம் ஒதுக்கப்படுகிறது.

★

மதுவிலக்கு
சென்ற இரண்டு ஆண்டுகளில் மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டது பற்றி அறிக்கை அனுப்புமாறு ராஜ்ய சர்க்கார்களை திட்டக் கமிஷன் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இராவிட முன்னேற்றக் கழகத் தக்கரை தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (26, குமார நாராயண செட்டித் தெரு, திருவல்லிக்கேணி) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.